பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 14 | திங்கட்கிழமை | 30.09.2024 | அதிர்வு 059

## யாழ். இந்துவில் 52 பேருக்கு 9 ஏ

### ஹாட்லியில் 32 பேருக்கு


2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறு பேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 06

# நாடாளுமன்றத் தேர்தலில் 'சங்கு' சின்னம் வேண்டாம்

## பொதுக் கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளிடம் தமிழ் மக்கள் பொதுச் சபை இப்படி கோரிக்கை

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபை நேரடியாகப் பங்கேற்காமல் இருக்க முடிவெடுத்துள்ளது. அதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் பயன்படுத்திய சங்கு சின்னத்தை இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளிடம் தமிழ் மக்கள் பொதுச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.



தமிழ் மக்கள் பொதுச் சபையின் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீமானங்கள் எடுக்கப்பட்டன. 06

# 300 பார் பெர்மிட்கள் இரத்து!

## ஜனாதிபதி அநுர அதிரடி நடவடிக்கை



இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் முன்னாள் எம்.பிக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட 300 பார் பெர்மிட்களை உடனடியாக இரத்துச் செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

முறையற்ற விதத்தில் பார் பெர்மிட்களைப் பெற்ற முன்னாள் எம்.பிக்கள் உள்ளிட்ட நபர்களின் பெயர் விபரங்களையும் தனக்கு வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

## கிளிநொச்சி பார் பெர்மிட்டில் ஒன்று விக்கியின் சிபாரிசில் வழங்கப்பட்டது



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் வழங்கப்பட்டுள்ள பார் (மதுபானச்சாலை) பெர்மிட்டுகளில் ஒன்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனின் கோட்டாவில் வழங்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

கிளிநொச்சி 06




தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எல்லாம் பெரும்பாலும் இந்த பொது தேர்தலில் தனித்தனி வழி போகப் போகின்றன என்பது பெரும்பாலும் நிச்சயமாகி விட்டது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்று இதுவரை குத்து விளக்கு சின்னத்தில் தங்களை அடையாளப்படுத்தி இருக்கின்ற ஐந்து கட்சிகளும் இப்போது சங்கு மார்க் சின்னத்துடன் ஒன்றாகக் களமிறங்கப் போகின்றன.

பொதுக் கட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் இறங்குபவருக்கு தேர்தல் மூலம் கிடைக்கும் செல்வாக்கை அதற்கு பின்னர் வரும் அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்ற இணக்கம் பொதுக் கட்டமைப்பின் 06




# நாணய நிதியப் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை விஜயம்!

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை மீளாய்வு செய்வதற் காக அதன் ஆசிய - பசுபிக் பிராந்தியத் திற்கான பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீநிவாசன் தலைமையிலான குழு நாட்டுக்கு வரவுள்ளது.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்திற்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாம் தவணைக் கொடுப் பனவை வழங்குவது தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் அதிகா ரிகள், நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிக ளைச் சந்தித்து அந்தக் குழு கலந்துரை யாடல்களில் ஈடுபடவுள்ளது.

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் சர்வ தேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டு வருகைதந்திருந்த நிலையில், நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர் தல் காரணமாக அவர்களின் விஜயம் பிற்போடப்பட்டிருந்தது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை தொடர்பில் ஆரா யவுள்ளது.

# மன்னார் பாலத்தில் இருந்து குதித்துத் தற்கொலைக்கு முயன்ற யுவதியைத் துரிதமாகச் செயற்பட்டுக் காப்பாற்றிய சார்ஜண்ட்!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் சார்ஜண்ட் மலலசேகர (41308)வின் துரித நடவடிக்கையின் காரணமாக நேற்று ஞாயிற் றுக்கிழமை மன்னார் பிரதான பாலத்தில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயன்ற பெண் ஒருவர் காப்பாற்றப்பட்டார் எனத் தெரியவருகிறது.

நேற்றுக் காலை மன்னார் நகருக்குள் நுழையும் பிரதான பாலத்திற்கு அருகில் உள்ள அலுவலகத்தில் பிரதேச போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் சார்ஜண்ட் மலலசேகர பணியில் இருந்த போது யுவதி ஒருவர் கையில் கடிதம் போன்ற ஒன்றை எடுத்துக் கொண்டு வந்துள்ளார்.

பின்னர் அந்த யுவதி அந்தப் பொலிஸ் அதிகாரியிடம் தமிழ் தெரியுமா எனக் கேட்டுள்ளார். அதற்கு சார்ஜண்ட் நீங்கள் யார் என்று தமிழில் கேட்க, அந்தப் பெண் தன் கையில் இருந்த கடிதம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை போலீஸ் சார்ஜண்டின் மேசையில் வைத்துவிட்டு மன்னார் பாலம் நோக்கி ஓடியுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பொலிஸ் சார்ஜண்ட் மலலசேகர அந்தப் பெண் தற்கொலை செய்து கொள்ளப் போகின்றார் எனச் சந்தேகித்து அவரைத் துரத்திச் சென்றுள்ளார்.

அப்போது அந்தப் பெண் பாலத்தின் பாதுகாப்புச் சுவரில் ஏறிக் கடலில் குதிக்கத் தயாராகியுள்ளார். அந்தப் பெண் பாலத்தில. இருந்து குதிக்கப் போனபோது மலலசேகர அந்தப் பெண்ணின் காலைப் பிடித்து அவரைக் காப்பாற்றினார்.

மீட்கப்பட்ட 24 வயதுடைய பெண் மன்னார் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# அஸ்வின் சுதர்சன், விராஜ் மெண்டிஸ் நினைவேந்தல், அஞ்சலி நிகழ்வுகள்

மறைந்த ஊடகவியலாளரும், கேலிச் சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் நினைவேந்தல் நிகழ்வும், தேசியப் பற்றாளர் விராஜ் மெண்டிஸின் அஞ்சலி நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில் நடைபெற்றன.

அஸ்வினின் திருவுருவ படத்திற்கு அஸ்வினின் பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து தேசியப் பற்றாளர் விராஜ் மெண்டிஸின் திருவுருவ படத்திற்கு, யாழ் பல்கலைகழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ரகுராமும், ஊடக கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனனும் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அஸ்வின் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மெண்டிஸ் ஆகியோரின் நினைவுரைகள் இடம்பெற்றன. அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.






















# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்தாதிருக்கப் பரிந்துரை

அண்மையில் நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையினை மீண்டும் நடத்தாதிருக்கப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி 1 வினாத்தாளில் மூன்று வினாக் கள் கசிந்தமை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இந்த பரிந்துரையினை முன்வைத்துள்ளது.

கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும், கசிந்த தாகக் கருதப்படும் கேள்விகளுக்கான புள்ளிகளை முழுமையாக வழங்கு வதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு பெறுபேறு கள் வெளியிடப்படும் என கல்வி, விஞ் ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் அமித் ஜயசுந்தர் தெரிவித் துள்ளார்.

இதனிடையே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவது மாண வர்களின் மனநிலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் குறித்த நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், மீண்டும் பரீட்சை நடாத் தப்படுவதது ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்திற்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் அந்தக் குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியின் சில கேள்விகளை ஒத்த வினாத்தாள் சமூக ஊடகங்கள் ஊடாக பகிரப்பட்டதாகப் பெற்றோர்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம்

நாட்டின் தென்கிழக்கு கடற் பகுதிக ளில் நிலவும் சீரற்ற வானிலை காரண மாக கடற்றொழிலாளர்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவி யல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேற்படி பகுதிகளில் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்று மணித்தியா லத்துக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.எனவே, மறு அறிவித்தல் வரை கடற் றொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




# பிரிட்டனில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்

தியாக தீபம் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரிட்டன் பிரதமர் வதிவிடத்துக்கு முன்பாக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரித்தானியக் கிளையின் ஒழுங்கமைப்பில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை மற்றும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக சர்வதேச சமூகமும், ஐ.நாவும் நடவடிக்கை எடுப்பதன் அவசியத்தை நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கத்துவத் தரப்புகளிடம் இருக்கின்ற போதிலும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி அந்த இணக்கத்தை முறித்துக் கொண்டு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சங்கைத் தான் கொண்டோடும் நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியத்தின் பெயரில் ஜால்ரா போட்ட ஏனைய தரப்புகளுக்கு – குறிப்பாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு – முதுகில் குத்தும் வேலையாகப் பார்க்கப்படுகிறது. அதனால் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மேற்படி ஐந்து கட்சிகளின் நிலைப்பாடு குறித்து கடுஞ் சீற்றத்தில்தில் இருக்கின்றனர் எனத் தெரிகிறது.

பொது வேட்பாளருக்கு பயன்படுத்திய சின்னத்தை – அதனால் கிடைத்த அரசியல் செல்வாக்கை – பெறுமதியை – ஆதரவை – தான் சுருட்டி கொள்வதற்காக மேற்படி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் இழிவாக செயல்படுகின்றன என்ற சீற்றம், பொது அமைப்பினருக்கு.

தமிழரசு கட்சியின் 'ஒன்றித்து செயல்பட வாருங்கள்!' என்ற அழைப்புக்கு எந்தத் தமிழ் கட்சியும் சாதகமான நிலைப்பாட்டை பிரதிபலித்து நிற்கவில்லை.

இதேசமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் வ ழமை போல மற்றைய தரப்புகளுடன் சேராமல் தனி கச்சேரி நடத்தும் வழமையான போக்கில் நிலைப்பாடு எடுத்திருப்பதாக தெரிகிறது.

இந்தப் பின்புலத்தில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் கட்சிகளின் ஒன்றுபட்ட நிலைப்பாடு என்பது கானல் நீராக தொடர போகின்றது என்பது தெளிவாகிறது.

---

## கிளிநொச்சி பார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தின் கரடிப்போக்குச் சந்தியில் ஏ – 9 வைன் ஸ்ரோர் எனும் பெயரில் இயங்கும் மதுபானசாலைக்கான அனுமதி வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஊடாகப் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சி.வி.விக்னேஸ்வரன் 2024.02.19 அன்று எழுத்து மூலம் வழங்கிய கடிதத்தின் அடிப்படையிலேயே இந்த மதுபான சாலைக்கான அனுமதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தனுசா நடராசா என்னும் பெயரில் இந்த மதுபானசாலைக்காக விக்னேஸ்வரன் பரிந்துரைத்துள்ளார்.

“இவ்வாறு உங்கள் பெயரில் இந்த மதுபானசாலை வழங்கப்பட்டுள்ளதே!” – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, “அந்த மதுபானசாலை அனுமதியை தாய், தந்தை அற்ற ஒரு பெண்மணிக்கே பெற்றுக்கொடுத்தேனே அன்றி நான் எடுக்கவில்லை.” – என்று பதிலளித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் 172 மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு அவை திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## நாடாளுமன்றத் தேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுவது என்ற யோசனையை முன்வைத்தது. இந்நிலையில், இது தொடர்பில் முடிவெடுப்பதற்குத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபை இரண்டு நாட்கள் கால அவகாசம் கோரியிருந்தது.

இது தொடர்பில் முடிவை எடுக்கும் முகமாக தமிழ் மக்கள் பொதுச் சபையின் கலந்துரையாடல் நேற்று திருகோணமலை, உப்புவெளியில் அமைந்துள்ள ஆயர் இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபையும், தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை உருவாக்கி, பொது வேட்பாளரைக் களம் இறக்கின. ஆனால், அதுபோல் நாடாளுமன்றத் தேர்தலில் நேரடியாகப் பங்கேற்பதில்லை என்று தமிழ் மக்கள் பொதுச் சபை முடிவு எடுத்துள்ளது.

மேலும், பொதுச் சின்னமாகிய சங்கு சின்னத்தை இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளிடம் கேட்பது என்றும் தமிழ் மக்கள் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

---

## யாழ்.இந்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

52 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

தமிழ் மொழி மூலம் 28 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 24 மாணவர்களும் இவ்வாறு 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் 62 மாணவர்கள் 8 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

அதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 32 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

தமிழ் மொழி மூலம் 17 மாணவர்களும், ஆங்கில மொழி மூலம் 15 மாணவர்களும் இவ்வாறு 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் 28 மாணவர்கள் 8 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 26 மாணவிகள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 19 மாணவிகள் 8 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.













# சிறுமி மீது துஷ்பிரயோகம் அறுபது வயது நபர் கைது

## சம்மாந்துறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

வீடுகளுக்குச் சென்று குர்ஆன் ஓதுவிக்கும் நபரினால் சிறுமி பாலியல் சேட்டைக்கு முகம் கொடுத்த சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட புற நகர் பகுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

26.09.2024 அன்று இந்தச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது. சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர் எனக் கூறப்படும் 60 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கு நேற்றுஜ் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபரை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 8 வயது சிறுமி தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.






















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஐக்கியம் முக்கியம்

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இன்று திங்கட்கிழமை பிற்பகல் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடவுள்ளார். கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இன்று பிற்பகல் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகளுடனான இந்திய உயர்ஸ்தானிகரின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இதற்கிடையில் -

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்த வாரம் இறுதியில் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் நிர்வாகத்துடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஒரு நாள் விஜயமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (ஒக்டோபர் 4ஆம் திகதி) அவர் இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னரே தமிழ்த் தேசியம் குறித்து அதிகம் பேசுகின்ற கட்சிகள் அனைத்தையும் இன்று சந்திக்கிறார் இந்தியத் தூதுவர்.

எதற்காக இந்தச் சந்திப்பு, என்ன கூறுவதற்காக இந்த கலந்துரையாடலை அவர் ஏற்பாடு செய்திருக்கின்றார் என்பவை எல்லாம் இலகுவாக ஊகிக்க தக்கவையே.

தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் தங்களுக்குள் பிளவு பட்டு நின்று, முட்டி மோதி, அதன் காரணமாக நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்து விடக்கூடாது என்ற ஆலோசனையை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நேரடியாக எடுத்துகூறுவதற்காக இந்திய தூதுவர் இன்றைய சந்திப்பைப் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றினதும் பிரதிநிதிகளும் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஐக்கியத்தை இந்திய தூதுவர் வலியுறுத்தினாலும், இக்கட்சிகள் ஐக்கியப்பட்டு நிற்பதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்பது ஓரளவு வெளிப்படையானது.

இலங்கைத் தமிழரசு கட்சி ஏற்கனவே தமிழ் கூட்டமைப்பாக இயங்கிய - கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளை - மீண்டும் ஒன்றித்துச் செயல்படுவதற்காக அழைத்துள்ளது. ஆயினும் அந்த அழைப்பு வெறும் வாய் பேச்சுக்கானது, கட்டுறுதியான ஒன்றிணைவுக்கானது அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

அதேநேரத்தில்தமிழரசின்அழைப்புத் தொடர்பில் ஏனைய தமிழ் கட்சிகள் பலவும் தங்கள் பிரதிபலிப்பை காட்டிவிட்டன.

ஐக்கியம் சாத்தியமில்லை என்பது இப்போதைக்கு வெளிப்படையாகத் தெரிகின்றது.

தமிழ்க் கட்சிகளின் - குறிப்பாக தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இருக்கும் கட்சிகளின் - நிலை தமிழர்களுக்கு இத்தேர்தலில் பெரும் பாதிப்பாக - பின்னடைவாக - வந்து அமையும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஆயிரனும் கூட தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்பதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்பது தான் யதார்த்த புறவுண்மையாகும்.

# செந்தில் பாலாஜி உள்ளிட்ட 4 பேர் தமிழக அமைச்சர்களாக பதவியேற்பு



தமிழகத்தின் புதிய அமைச்சர்களாக செந்தில் பாலாஜி, ஆவடி நாசர், பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் மற்றும் கோ. வி.செழியன் ஆகியோர் பதவியேற்றனர். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஆளுநர் மாளிகையில் அமைச்சர்கள் பதவியேற்பு விழா நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது. தமிழக அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அமைச்சர்க ளுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் பூங் கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர், பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், செந்தில் பாலாஜி, ஆவடி நாசர் மற்றும் கோ.வி.செழியன் ஆகியோருக்கு ஆளுநர் ரவி பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத் தார். அமைச்சர்கள் பதவியேற்றவுடன் ஆளுநருக்கும், முதல்வருக்கும் பூங்கொத்து கொடுத்தனர்.

அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது குடும்பத்துடன் பங்கேற்றார். அதேபோல், கூட்டணி கட்சித் தலைவர்கள் வைகோ, செல்வப் பெருந்தகை, திருமாவளவன், முத்தரசன், ஜவாஹிருல்லா உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

தமிழக அமைச்சரவையில் நேற்று முன்தினம் மாற்றம் செய்யப்பட்டது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டார். அமைச்சர்கள் மனோ தங்கராஜ், கே.ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் அமைச்சர வையில் இருந்து நீக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெற்றுள் ளது.

புதிதாக பொறுப்பேற்ற அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செந்தில் பாலாஜிக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையும், கோ.வி செழியனுக்கு உயர்கல்வித் துறை யும், ஆவடி நாசருக்கு சிறுபான்மை நலத்துறையும், இரா. ராஜேந்திரனுக்கு சுற்றுலா துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த பொன்முடிக்கு வனத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. சுற்றுச்சூழல் அமைச்சர் வி.மெய்யநாதனுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக இருந்த கயல்விழி செல்வராஜுக்கு மனித வள மேம்பாட்டுத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. வனத்துறை அமைச்சராக இருந்த மதிவேந்த னுக்கு, ஆதி திராவிடர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு பால் வளத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு கூடு தலாக சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் காலநிலை மாற்றம் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் 6 பேரின் இலாக்காக்கள் மாற்றியமைக்கப்பட்டது குறிப்பி டத்தக்கது.

முன்னதாக, துணை முதல்வர் உதயநிதி, பெரியார் திட லுக்குச் சென்று தந்தை பெரியாரின் நினைவிடத்தில் மலர் தூவி ரியாதை செலுத்தினார். அதோடு, அண்ணா, முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களுக்குச் சென்று மலர் தூவி மரியாதை செய்தார்.

பின்னர், பெரியார் திடலில் திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணியை சந்தித்தார். தொடர்ந்து பேராசிரியர் அன்பழ கன் வீட்டுக்குச் சென்று அங்கே அவருடைய உருவப்படத் துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். சென்னை கோபால புரத்தில் கருணாநிதி வாழ்ந்த இல்லத்துக்குச் சென்றார். தொடர்ந்து சி.ஐ.டி. காலனி இல்லத்துக்குச் சென்று தனது அத்தை கனிமொழியையும் சந்தித்து ஆசி பெற்றார். அதோடு, நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகனிடனும் நேரில் சென்று ஆசி பெற்றார்.





# என் மீதான விமர்சனங்களுக்கு பணிகள் மூலம் பதில் அளிப்பேன்

## உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

“என் மீது வைக்கப்படும் விமர்சனங்களை வரவேற்கிறேன். அதை உள்வாங்கிக் கொண்டு, எனது பணிகள் மூலம் பதில் அளிப்பேன்.”

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக அமைச்சரவையில் நேற்று முன்தினம் மாற்றம் செய்யப்பட்டது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர்கள் மனோ தங்கராஜ், கே.ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். புதிய அமைச்சர்கள் ஆளுநர் மாளிகையில் நேற்று மாலை பதவியேற்றனர்.

இந்த நிலையில் உதயநிதி ஸ்டாலின், நேற்று பெரியார் திடலுக்குச் சென்று தந்தை பெரியாரின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதோடு, அண்ணா, முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களுக்குச் சென்று மலர் தூவி மரியாதை செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“துணை முதல்வர் என்பது பதவி அல்ல, எனக்கு கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் பொறுப்பு. என் மீது வைக்கப்படும் விமர்சனங்களை வரவேற்கிறேன். அதை உள்வாங்கிக் கொண்டு, எனது பணிகள் மூலம் பதில் அளிப்பேன். வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக எனது பணியை செய்து வருகிறேன். முதலமைச்சர், மூத்த அமைச்சர்களின் வழிகாட்டுதல்படி செயல்படுவேன்.” – என்றார்.

முன்னதாக உதயநிதி ஸ்டாலின் தனது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

“நம் பெருமைமிகு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பணியாற்றுவதற்கான வாய்ப்பை நமக்கு அளித்த முதல்வர் ஸ்டாலின், பொதுச்செயலாளர் – பொருளாளர் மற்றும் அமைச்சர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றோம். ‘துணை முதலமைச்சர்’ என்பது பதவியல்ல, பொறுப்பு.. என்பதை உணர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் ஏற்றத்துக்காக, பெரியார் – அண்ணா – கலைஞர் வகுத்து தந்த பாதையில், முதல்வரின் வழிகாட்டலில், சக அமைச்சர் பெருமக்களோடு இணைந்து பணியாற்றுவோம். அன்பும், நன்றியும்.” – என்று குறிப்பிட்டிருந்தார்.





# பெய்ரூட் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் கொமாண்டர் நபில் கவுக் உயிரிழப்பு

## இஸ்ரேல் இராணுவம் தகவல்

லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் வான்வழி தாக்குதலில், ஹிஸ்புல்லாக்களின் மற்றொரு உயர்மட்ட தளபதியான நபில் கவுக் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்பு படை (ஐ.டி.எஃப்) அதன் எக்ஸ் பக்கத்தில் நேற்று வெளியிட்டிருக்கும் பதிவில்,

“ஹிஸ்புல்லாக்களின் பாதுகாப்பு பிரிவின் தளபதியும், நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான நபில் கவுக் கொல்லப்பட்டார். ஹிஸ்புல்லாக்களின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த கவுக், இஸ்ரேல் அரசு மற்றும் மக்களுக்கு எதிரான தீவிரவாத தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டார். கடந்த 1980 இல் அவர் ஹிஸ்புல்லாவில் இணைந்தார். அவரது துறையில் நிபுணத்துவம் வாய்ந்த முக்கிய நபராகக் கருதப்பட்டார்.

ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய அனைத்து தளபதிகளையும் இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழிக்கும். இஸ்ரேல் அரசு மற்றும் மக்களை அச்சுறுத்தும் அனைவருக்கும் எதிராக ஐடிஎஃப் செயல்படும்.” என்று குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து ஹிஸ்புல்லாக்கள் இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.

இதனிடையே, இஸ்ரேலின் வான்வழி தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லாக்களின் தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லாவின் உடல் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெய்ரூட் மீது நடந்த தாக்குதலில் ஹிஸ்புல்லாக்களின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதை நேற்று முன்தினம் அறிக்கை மூலம் உறுதி செய்த ஹிஸ்புல்லா அமைப்பு, அவர் எவ்வாறு கொல்லப்பட்டார், அவரது இறுதிச் சடங்கு எப்போது நடைபெறும் என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

என்றாலும் தகவல் அறிந்த இருவர் கூறுகையில், ‘நஸ்ரல்லாவின் உடலில் எந்த நேரடிக்காயங்களும் இல்லை. குண்டு வெடித்த அதிர்ச்சியின் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்’ என்று தெரிவித்துள்ளனர்.







# இஸ்ரேல் மீது 8 ஏவுகணைகளை ஏவியது ஹெஸ்புல்லா அமைப்பு




இஸ்ரேலின் நகரம் ஒன்றை இலக்கு வைத்து நேற்று ஹெஸ்புல்லா அமைப்பினால் எட்டு ஏவுகணைகள் ஏவப் பட்டுள்ளன.

எனினும் குறித்த தாக்குதலினால் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இஸ்ரேலின் பல பகுதிகளில் தொடர்ந்தும் ஹெஸ்புல்லா அமைப்பினரால் தாக்குதல்கள் முன்னெடுக்கப் பட்டு நடத்தப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.




# நேபாளத்தில் வெள்ளப் பெருக்கு; உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 129 ஆக உயர்ந்துள்ளது.

நேபாளத்தில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகிறது.

இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

மேலும் தலைநகர் காத்மாண்டுவில் ஏற்பட்ட நிலச்சரி வில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த அனர்த்தத்தில் மேலும் 62 பேர் காணாமல் போயுள் ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிலச்சரிவு காரணமாக நேபாளம் முழுவதும் 44 நெடுஞ் சாலைகள் மூடப்பட்டன.

கன மழை மற்றும் அதிக காற்று காரணமாக மின்கம் பங்கள் முறிந்து விழுந்ததால் அங்கு மின்சாரமும் துண்டிக் கப்பட்டது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.






# முன்பள்ளிக்கு செல்ல மறுத்த மகளுக்குச் சூடு போட்ட தாய்

முன்பள்ளிக்கு செல்ல மறுத்த மகளைத் தீக்காயங்களுக்குள்ளாக்கிய தாய் கைது.

முன்பள்ளிக்கு செல்ல மறுத்த தமது மகளைத் தீக்காயங்களுக்கு உள்ளாக்கிய தாயொருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, நாகஸ்தென்ன பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த 30 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி தாய் கரண்டியை சூடாக்கி சிறுமியின் உடலில் தீக்காயங்களை ஏற்படுத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

காயமடைந்த சிறுமி தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை



# பெரும்பாலான பகுதிகளில் இன்று பலத்த மழை பெய்யும்

## வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறல்

மத்திய, சபரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்தின் சில இடங்களிலும் இன்றைய தினம் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேற்படி பகுதிகளில் இன்று 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவிலான மழை பெய்யக்கூடும்.

அத்துடன், மாலை அல்லது இரவு வேளைகளில், இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுகிறது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, கிழக்கு, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் அதிகளவில் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் எனவும் அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# வவுனியாவில் தரம்10 இன் மாணவன் 8ஏ,பி பெறுபேறு பெற்றுச் சாதனை!

(கே.வசந்தன்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் வெளிவாரியாக சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி 8ஏ,பி சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளான்.

கார்த்திகேயன் ஷயனுஜன் என்ற மாணவனே இவ்வாறு சாதனை படைத்துள்ளான்.

கடந்த 2023 இல் பத்தாம் தரத்தில் கல்வி பயின்று வந்திருந்த நிலையில் 2023-2024ம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சதாரண பரீட்சையில் வெளிவாரியாக பரீட்சையை எழுதியிருந்தான்.





இந்நிலையில் கா.பொ.த சாதாரன தர பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன.

இதில் இந்த மாணவன் 8ஏ சித்திகளையும் 1பி சித்தியையும் பெற்று ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளான்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் நிதியுதவி

பொருளாதாரப் பின்னடைவில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி செய்யும் இந்தியாவின் திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பயனடையவுள்ளனர்.

இந்த திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்கள் பயனடையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்த திட்டத்தின் கீழ் 30 லட்சம் ரூபா நிதி அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதி வழங்கும் திட்டம் தொடர்பான நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்திய துணை தூதுவர் ஸ்ரீ சாய் முரளி உட்பட தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எஸ். சற்குணராஜா, பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேவேளை, கிளிநொச்சி வளாகத்தை நிர்மாணப்பதற்கும், அது தொடர்பான மேம்பாடுகளுக்கும் இந்திய அரசாங்கத்தினால் நிதி உதவி வழங்கப் படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# இந்தியச் சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருகை

நாட்டுக்கு வருகைத்தந்துள்ள சுற்றுலாப்பயணிகளில் 21.6 சதவீதமானோர் இந்தியாவிலிருந்தே வருகைத் தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் 99,955 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

அதன்படி, இந்தியாவிலிருந்து 21,607 பேர் பிரவேசித்துள்ளனர்.

பிரித்தானியாவில் இருந்து 7,496 பேரும், ஜேர்மனியில் இருந்து 6,651 பேரும், சீனாவில் இருந்து ஆறாயிரத்து 640 பேரும் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 14 இலட்சத்து 62 ஆயிரத்து 623 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

# நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கட்டுமான நடவழக்கை மோசடி

நாடளாவிய ரீதியில் வீடுகளைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் மற்றும் கட்டுமான நடவடிக்கை எனும் போர்வையில் மேற்கொள்ளப் பட்டுவரும் பாரிய மோசடிகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகன மோசடி தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கிரிபத்கொட பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப் பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்த விடயம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

போலி ஆவணங்களைத் தயாரித்து ஒரு கோடி 30 லட்சம் பெறுமதியான காரை விற்பனை செய்த குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தானை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப் படையில், பமுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இருவரும் வாகனக் கடத்தல் மட்டுமின்றி பாரியளவிலான வீடு விற்பனை மோசடிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.



# நாட்டு அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது; அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் தகவல்

சந்தையில் தற்போது நாட்டு அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலைமையானது பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினால் ஏற்படுத்தப்படுவதாகவும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டு அரிசி, கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படும் எனவும், இது அரசாங்கத்திற்கு ஆதரவாக எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும் பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின் போது, அதன் தலைவர் டட்லி சிறிசேன இதனைத் தெரிவித்திருந்தார்.

இதுவரைக் காலமும் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்கப்படவில்லை எனவும், இது விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் மேற்கொள்ளப்படும் பாரிய மோசடி என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே, ஊடகங்களுக்கு கருத்துரைத்த சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சேமசிங்க மேற்படி குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை ஆதரிக்கின்றார் என டட்லி சிறிசேன கூறுகிறார்.

கடந்த அரசாங்கங்களுடன் இணைந்து செயற்பட்ட வகையில், தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியாது என்பதை அவர் புரிந்துகொண்டுள்ளமையையே இது காட்டுவதாகவும் சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# தம்பிராசாவின் அணியினர் சுயேச்சையாகக் களத்தில்!

ஊழலை ஒழிப்பதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் அடக்கு முறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு சுயேச்சையாகக்களமிறங்கும்என அடக்கு முறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி தம்பிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திக் அமைந்துள்ள அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தமிழ அரசியல் வாதிகள் சிங்கள கட்சிகளுக்கு அடிமையாகி நீண்டகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர்

ஏமாற்றங்களை எல்லாம் தீர்ப்பதற்கு கேட்பதற்காக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு இம்முறை வடக்கு, கிழக்கு, புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களில் வேட்பாளர்களை நிறுத்தி சுயேச்சையாக நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்க இருக்கின்றோம் என்றார்.




# வெளிநாட்டுப் பயணிகள் மீது கழிவுகளை வீசித் தாக்குதல்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்த வெளிநாட்டுப் பயணிகள் மீது கழிவுகளால் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் திம்புல பத்தனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொட்டகலை மற்றும் தலவாக்கலை ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் வைத்து, வீதியில் சென்ற சிலரால் ரயிலுக்குள் கழிவுகள் அடங்கிய பொதியொன்று வீசப்பட்டுள்ளது.

அதன்போது, ரயிலில் பயணித்த வெளிநாட்டைச் சேர்ந்த தம்பதியினர் மீது, மேற்படி கழிவுப் பொதி வீழ்ந்துள்ளது.

பின்னர், ரயில் தலவாக்கலை நிலையத்தை அடைந்ததும், மேற்படி தம்பதியினர் ஆடைகளை மாற்றிக்கொண்டதுடன், ரயில் பெட்டியும் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அந்த ரயில் பெட்டியில் பயணித்த பயணி ஒருவர் நானுஓயா ரயில் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து இது தொடர்பில் திம்புல பத்தனை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பில் சேரும் வாய்ப்பை விக்கினேஸ்வரனும் நிராகரித்தார்

## சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் ஒட்டாது என்கிறார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாங்கள் சேரும் வாய்ப்புக்கள் இல்லை. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் என்றென்றும் ஒன்று சேராது. வேண்டுமெனில் தமிழ்த் தேசியத்தில் உண்மையில் ஈடுபட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் எம் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியில் சேர்ந்து பயணிக்க முடியும்.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

'மாதத்திற்கொரு கேள்வி' என்ற பெயரில் நேற்றுத் தாம் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:–

**கேள்வி:-** சுமந்திரன் அவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களை திரும்ப அழைத்துள்ளார். நீங்களும் தமிழ்த் தேசியத்தில் ஈடுபாடுடையவர்கள். அனைவரும் சேர்ந்து தேர்தலில் நிற்பது அவசியம் என்று கூறியுள்ளீர்கள். அப்படியானால் நீங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் மீண்டும் சேரும் வாய்ப்புக்கள் உள்ளனவா?

**பதில்:-** இல்லை. கட்சிகளோ, கூட்டுக்களோ, சின்னங்களோ தமிழ்த் தேசியத்திற்கு முக்கியமல்ல. தமிழ்த் தேசிய சிந்தனை உடையவர்களே முக்கியம். அண்மையில் தமிழ் மக்கள் சார்பில் தமிழ்த் தேசிய சிந்தனையுடைய அரிய நேத்திரன் அவர்களை 7 தேசியக் கட்சிகளும் 80 சிவில் சமூகத்தினரும் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடுத்தினார்கள். நான் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் இதற்கென வெளியில் வந்து பலவிதங்களில் அரியநேத்திரன் அவர்களுக்கு உதவினேன். பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கூட்டங்களில் பேசினேன். கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசினேன். கட்டமைப்பு பற்றிய பல கேள்விகளுக்குப் பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும், வெளிநாட்டு ஊடகங்களிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதில் இறுத்தேன். ஆனால் அரிய நேத்திரனை முன்னிறுத்திய பின் எமது ஏழு கட்சிகளில் அவர் சார்பாக வெளிப்படையாக வெளியே வந்து தமது ஆதரவைத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்? பலர் இக் கால கட்டத்தில் காணாமல் போய்விட்டார்கள்.

ஒரு வைத்தியசாலையில் இருந்து, நவீன பரிசீலனைகளை மேற்கொள்ள என்னை மற்றொரு வைத்தியசாலைக்கு அனுப்பிய போது இடைப்பட்ட காலத்தில் தேர்தல் நியமன நாளன்று தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் அரிய நேத்திரனுடன் நானும் சிற்பரன் அவர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். சிரமம் பாராமல் நாம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்குக் காரணம் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் வேட்பாளர் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற வேண்டும் என்பதற்காகவே. இவ்வாறான ஆதரவையும் அனுசரணையையும் குத்து விளக்கை மையமாக வைத்து செயற்பட்டு வரும் கட்சிகளிடையே நாங்கள் காணவில்லை. அவர்களின் மனோநிலையைப் புரிந்து கொண்டதால்தான் நாங்கள் அவர்களின் கூட்டில் இருந்து வெளியேறி வந்தோம்.

அதே போல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் அணியின் தலைவர் தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து ஒரு சிங்கள வேட்பாளருடன் சேர வேண்டும் என்றே ஒற்றைக் காலில் நின்றார். அவர் தமிழ்த் தேசிய வேட்பாளரை எதிர்த்தார். தமிழ்த் தேசியப் பற்றாளரான சிறிதரன் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப் பார்க்கும் இந் நபர் எவ்வாறு எம்மை தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் சேர அழைக்கலாம்? அழைத்தாலும் அவரின் உள் எண்ணம் பற்றி சந்தேகம் எழுகின்றது. தமிழ்த் தேசியத்தை உதட்டளவில் பாவிக்கப் பார்க்கின்றாரோ நானறியேன்.

மூன்றாவதாக பகிஷ்கரிப்பு அணியினர் சிங்கள வேட்பாளரைப் பகிச்க்கரிப்பதாகக் கூறி கடைசியில் தமிழ்த் தேசிய வேட்பாளரையும் பகிஷ்கரித்தனர்.

இவர்கள் யாவரும் தமிழ்த் தேசியத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருபவர்களாகத் தெரியவில்லை. தனிப்பட்ட சுயநல காரணங்களே அவர்களை இயக்கி வருகின்றன என நான் உணர்கின்றேன்.

எம் தமிழ் மக்கள் கூட்டணியைப் பொறுத்தவரையில் முதியவர்கள் நாம் பின்னின்று, இளைஞர், யுவதிகளை முன்னிறுத்தித் தமிழ்த் தேசியப் பாதையில் அவர்கள் பயணிக்க வழிவகுக்க வேண்டும் என்று நினைக்கின்றோம்.

சிலர் ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி ஒற்றுமை ஏற்படுத்த முனையலாம். ஆனால் அவர்களின் சிந்தனை தமிழ்த் தேசியம் பாற்பட்டதா அல்லது சொந்த சுயநலம் பாற்பட்டதா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சென்றவர்கள்



திரும்பி வாருங்கள் என்று கூறுவது தமிழ்த் தேசியத்துக்காக அல்ல. சுயநல காரணங்களுக்காகவே!

அரியநேத்திரனின் சின்னத்தை சிலர் தமக்குப் பெற்றவுடன் தாமும் அரியநேத்திரனாக உருமாற்றம் பெற்றுவிடப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. உதயசூரியனை சின்னமாக முன்பு எடுத்தவர்கள் தாம் தேர்தலில் வெற்றி பெறப் போவதாகக் கற்பனை செய்தார்கள். ஆனால் எமது தமிழ் வாக்காளர்கள் அந்தச் சின்னத்துக்குப் பதில் குறித்த சின்னத்தில் கேட்டவர்களையே அடையாளம் கண்டு அவர்களைப் புறக்கணித்தார்கள். சின்னம் பெற்றால் சுயநலவாதிகள் பொது நல வாதிகளாக மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களாக உடனே மாறிவிடுவார்கள் என்று நினைப்பது மடமை.

ஆகவே ஒற்றுமை வேண்டும். நாம் ஒன்றுபட வேண்டும். இளைஞர், யுவதிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை முழுமனதுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் எந்தவித முரணான கருத்துக்கும் இடமில்லை.

ஆனால் அதை வேண்டுபவர்களின் கடந்த கால சிந்தனைகளும் நடத்தைகளும் அதற்கு அனுசரணை தருவதாக அமைந்திருந்தனவா என்பதை எமது மக்கள் சிந்திக்க வேண்டும். சுயநல வாதிகளைக் களைந்து உண்மையாகத் தேசியத்தை விரும்புபவர்கள் யார் என்று அடையாளம் கண்டு அவர்களை ஒன்றிணைக்க முன்வர வேண்டும்.

ஆகவே நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேரும் வாய்ப்புக்கள் இல்லை. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் என்றென்றும் ஒன்று சேராது.

வேண்டுமெனில் தமிழ்த் தேசியத்தில் உண்மையில் ஈடுபட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் எம் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியில் சேர்ந்து பயணிக்க முடியும். – என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.09.2024




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். பணத்தை அதிகமாக சம்பாதிப்பதற்கும் சேமிப்பதற்கும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் உங்கள் உடன் பிறப்புகளின் நலனுக்காக பணம் செலவு செய்ய வேண்டி நேரும்.




இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.09.2024




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரவை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும். உங்கள் நிதிநிலையில் கட்டுப்பாட்டை பராமரிக்க வேண்டும்.

இன்று சளி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




நீங்கள் அறிவு பூர்வமாக செயலாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

